நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## மான்சென்டோவின் தங்கப் புரட்சி

ஆர்.எஸ்.நாராயணன்

First Published : 22 Nov 2011 02:51:44 AM IST

முதல் பசுமைப் புரட்சியை இந்தியாவின் வேளாண்மைத்துறை, பொதுநல நோக்கில் கோதுமையிலும் பின்னர் நெல்லிலும் வீரிய ரக விதைகளைக் கொண்டு ரசாயன உர பலத்துடன் மண்வளத்தைப் படிப்படியாக அழித்து உணவு உற்பத்தியைப் பெருக்கியபோது, "எங்கு நோக்கினும் பசுமையடா' என்றார்கள்.

இந்தப் பசுமையைப் பார்த்து பயிர்களைத் தாக்கும் பூச்சி இனம் உயர்ந்து பயிர்களைக் காக்கும் பூச்சி இனம் அழிந்து மெல்ல மெல்ல உற்பத்தித்திறன் குறைவதைக் கண்டு இரண்டாவது பசுமைப் புரட்சியை மத்திய அரசு 2010-ல் அறிவித்துப் பொறுப்பை மான்சென்டோவுக்கு வழங்கிவிட்டதால் இன்றைய இந்தியாவில், "எங்கு நோக்கினும் தங்கமடா' என்று சொல்லும் அளவில் மஞ்சள்நிற மக்காச்சோளம் பொங்கி வழிவதைப் பார்க்கிறோம். மான்சென்டோ தங்களின் வீரிய ஒட்டு மக்காச்சோள விதைகளுக்கு தங்க சத்தியம் வழங்கி நிரூபித்தும் விட்டார்கள்.

மாபெரும் தந்திரங்களைக் கடைப்பிடித்து மாநில அரசுகளை வசப்படுத்திவிட்டார்கள். வளம்குன்றா வேளாண்மை, உற்பத்தி உயர்வு, விவசாயிகளுக்கு லாபம் என்பது மாநிலக் கொள்கையானால், அவையே எங்கள் கொள்கை என்று மக்காச்சோளத்தை சிறு விவசாயிகள் வரை எடுத்துச் சென்றுள்ளனர். பழங்குடி மக்களிடமும் மக்காச்சோள வியாபாரம் சென்றுவிட்டது.

பழங்குடி மக்கள்-சிறு குறு விவசாயிகளின் முன்னேற்றத்துக்குப் பாடுபடும் தொண்டு நிறுவனங்களுடனும் மான்சென்டோ தொடர்பு கொண்டு இலவச விதை (வீரிய ஒட்டுரகம்) வழங்கியுள்ளது. வீரிய ஒட்டு மஞ்சள் மக்காச்சோள விதைகளை அறிமுகப்படுத்தி இந்திய உற்பத்தியை 2010-11-ல் 2.1 கோடி டன்னுக்கு உயர்த்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

உண்மையில் நமது மக்காச்சோள உற்பத்தி 1.80 கோடி டன்னுக்கு உயர்ந்துள்ளதால் அமெரிக்காவில் மகிழ்ச்சிக்குப் பஞ்சமில்லை. என்ன புதிராக உள்ளதா? இந்தியாவில் மக்காச்சோள உற்பத்தி உயர்ந்ததால் அமெரிக்கா எப்படி சந்தோஷம் அடைய முடியும்?

உணவை மையமாகக் கொள்ளாமல் தொழிலுக்குரிய கச்சாப் பொருள் உற்பத்தியை மையப்படுத்தும் விவசாயத்தை இந்தியா கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் அமெரிக்கன் எய்ட் ஆர்வமாயுள்ளது.

பி.ட்டி பருத்தி வெற்றியைத் தொடர்ந்து மக்காச்சோளத்தில் வீரிய ஒட்டு விதையையும் மான்சென்டோ வழங்கி இரண்டாவது பசுமைப்புரட்சிக்கு வித்திட்டு இன்று வெற்றியும் பெற்றதால் அமெரிக்கா மகிழ்ச்சி அடைந்துள்ளது. மக்காச்சோளம் முழுமையான மனித உணவு இல்லை. உற்பத்தியில் 15 சதவிகிதம் மட்டுமே மனித உணவு. 60 சதவிகிதம் கோழித்தீவனம், 10 சதவிகிதம் மாட்டுத்தீவனம், 10 சதவிகிதம் ஸ்டார்ச் போக மீதி விதைக்கும் ஜின் எத்தனாலுக்கும் பயனாகிறது. 15 சதவிகித மனித உணவும்கூட பாப்கார்ன், கார்ன் ஆயில் (சமையல் எண்ணெய்), கார்ன்ஃப்ளேக்(அவல்) தொழில்வளர்ச்சிக்கு ஆக்கமூட்டுகிறது.

இந்தியாவில் பாரம்பரியமாக சிறு தானியங்கள், பயறு வகை தானியங்கள், சாகுபடியான நிலங்களிலும் கோடை கோதுமை, கரும்பு சாகுபடியான நிலங்களிலும் இன்று மக்காச்சோளம் அரங்கேறிவிட்டது.

கரும்புக்கு நல்ல விலை இல்லையென்பதால் மானியங்களை அள்ளி வழங்கும் மஞ்சள் மக்சாச்சோள சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதன் காரணம், மும்மடங்கு விளைச்சல்.

கடந்த பத்தாண்டு நிலையுடன் ஒப்பிட்டால் அரிசியின் வளர்ச்சி ஆண்டுக்கு 1.6 சதவிகிதம், கோதுமை 1.9 சதவிகிதம், பயறு 1 சதவிகிதம். ஆனால் மக்காச்சோளம் மட்டும் 7.6 சதவிகிதம் வளர்ச்சி. இவ்வளவுக்கும் சுமார் 20 சதவிகிதம் வீரியரக ஒட்டுவிதை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மஞ்சள் மக்காச்சோளம் கோதுமை உற்பத்திக்கு இணையாக 6 முதல் 7 கோடி டன்கள் என்ற அளவுக்கு உயர்ந்து இரண்டாவது பசுமைப்புரட்சி மஞ்சள் தங்கப் புரட்சியாக விரிவடையும் என்பதில் ஐயம் வேண்டாம்.

ஏனெனில், இந்தியாவில் மற்ற உணவு சாகுபடிகளைப் புறந்தள்ளி மக்காச்சோள உற்பத்தியைப் பன்மடங்கு உயர்த்த வாஷிங்டனிலும் சிகாகோவிலும் திட்டம் தீட்டப்பட்டு விட்டது.

மக்காச்சோள சாகுபடி தமிழ்நாட்டில் இதர மாநிலங்களுடன் ஒப்பிடும் அளவில் உயர்வாக இல்லை என்றாலும் சுமார் 2 லட்சம் டன் அளவில் உண்டு. அதேசமயம், மான்சென்டோவின் வீரிய ஒட்டுரக விதைப்பயன் தமிழ்நாட்டில் 100 சதம். பிற மாநிலங்களில் 20 முதல் 30 சதவிகிதமே. பருத்தி சாகுபடி செய்து நஷ்டமடைந்து தற்கொலை செய்துகொண்ட அதே மாநிலங்களில்தான் மஞ்சள் மக்காச்சோளம் - மான்சென்டோவின் வீரிய ஒட்டு ரக உதவியால் தொழில்துறைக்குத் தேவையான கச்சாப்பொருளாக மாறி உற்பத்தி உயர்ந்துள்ளது.

கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், பிகார், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் ஆகியவை முன்னணி மாநிலங்கள். இம் மாநிலங்களில் ஆண்டுதோறும் 10 லட்சம் டன்கள் முதல் 40 லட்சம் டன்கள் வரை மக்காச்சோள உற்பத்தி உண்டு.

கடந்த 10 ஆண்டுகளில் எப்படிப்பட்ட விவசாயிகள் புதிதாக மஞ்சள் மக்காச்சோள சாகுபடியில் இறங்கியுள்ளார்கள் என்று கவனித்தால் பணப் பொருளாதாரத்தில் சிக்காமல் சொந்தத் தேவைக்கென்று விவசாயத்தை வாழ்க்கையெனப் போற்றி வெள்ளை ரகத்தைப் பயிரிட்டு வாழ்க்கையை ஓட்டியவர்கள். மேலும் சிலர் சொந்தப் பயனுக்கென்று மானாவாரியாகப் புஞ்சை

தானியங்கள், சிறு தானியங்கள் விளைத்தவர்கள். இப்படிப்பட்ட விவசாயிகள் மான்சென்டோவிடம் சிக்கிவிட்டனர்.

மக்காச்சோளத்தில் முக்கியமாக இரண்டு ரகங்கள் உண்டு. ஒன்று வெள்ளை. வெள்ளை மக்காச்சோளமே மனித உணவாகவும் சுவையாகவும் இருக்கும்.

கோதுமை மாவில் ரொட்டி செய்வதுபோல் வெள்ளை மக்காச்சோளத்தை ரொட்டி சுட்டு சாப்பிடுவார்கள். மஞ்சள் மக்காச்சோளம் மனித உணவு அல்ல. கோழி உணவு.

சமீபகாலமாக மஞ்சள் மக்காச்சோள மாவு கறவை மாடுகளின் அடர் தீவனமாகவும் பயனாகிறது. தங்கள் உணவுக்காக வெள்ளை மக்காச்சோளம் பயிரிட்ட சிறு விவசாயிகள், மலைப்பகுதி விவசாயிகள் இன்று மான்சென்டோவால் கவரப்பட்டு வீரிய ஒட்டு மஞ்சள் ரகங்களைத் தொழில் உபயோகத்துக்குப் பயிரிட்டு லாபமும் பெறுகிறார்கள்.

பாரம்பரிய மக்காச்சோளம் ரசாயன உரம் பூச்சி மருந்து இல்லாமல் மானாவாரியாகவோ - குறைந்த பாசனத்திலோ விளைந்த நிலை மாறி இன்று கூடுதல் இடுபொருள் - நீர்ச் செலவில் வீரிய ஒட்டு பயிராகிறது. நடுத்தரம் - பெரிய விவசாயிகள் மஞ்சள் மக்காச்சோளம், கோதுமை, கரும்பு சாகுபடியைவிடக் கூடுதல் லாபம் தருவதால் மெல்ல மெல்ல மஞ்சள் மக்காச்சோளத்துக்கு மாறிவிட்டார்கள். மான்சென்டோவின் தங்கப்புரட்சியில் சங்கமித்துவிட்டனர்.

உலகளாவிய நிலையில் மக்காச்சோள உற்பத்தியில் முதல் நிலை வகிக்கும் அமெரிக்காவில் 33.3 கோடி டன்னுடன் ஒப்பிட்டால் இந்திய உற்பத்தி சுமார் 2 கோடி டன் என்பது குறைவு என்றாலும் அமெரிக்காவின் ஆலோசனைப்படி மாற்றுப்பயிர்த் திட்டத்தில் மஞ்சள் மக்காச்சோளம் சாதனை படைத்துள்ளது.

இந்தியாவில் மட்டுமல்ல, ஆப்பிரிக்க - ஆசிய நாடுகளிலும் மஞ்சள் மக்காச்சோள உற்பத்திக்கு அமெரிக்கா ஊக்கப்படுத்துவதன் நோக்கமே ஜின் எத்தனால் உற்பத்தி மூலம் கார்பன் கிரெடிட்டையும் (ஸ்ரீஹழ்க்ஷர்ய் ஸ்ரீழ்ங்க்ண்ற்) தாங்களே சுருட்டி விடலாம் என்பதே.

அமெரிக்காவில் விவசாயிகளுக்கு மஞ்சள் ரக மக்காச்சோள சாகுபடி என்றால் சிறப்பு மானியங்கள் உண்டு. அமெரிக்காவில் சராசரி உற்பத்தித்திறன் ஹெக்டேருக்கு 10 டன்கள். அங்கு கோதுமை உற்பத்தியும் உணவாகப் பயனுறும் வெள்ளை ரக மக்காச்சோள உற்பத்தியும் குறைந்து வருகிறது. ஏனெனில், உலகிலேயே மக்காச்சோள ஜின் - எத்தனால் உற்பத்தியில் அமெரிக்காவின் ஏகபோகம் கொடிகட்டிப் பறக்கிறது.

அமெரிக்காவின் மக்காச்சோள எத்தனால் தொழிலின் தேவையே 200 கோடி டன்களாகும். சுமார் 120 கோடி டன் அளவில் மக்காச்சோளம் எரிபொருள் சாராயமாக மாறிப் பெட்ரோலுடன் கலக்கப்படுகிறதாம். மக்காச்சோள எத்தனால் - மீண்டும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி என்பதால் கார்பன் கிரெடிட்டும் உண்டு.

எனவே, உலகம் முழுவதும் உணவுப்பயிராகிய மக்காச்சோளத்தை மஞ்சளாக்கித் தன்னாட்டின் தொழில் தேவைக்குரிய கச்சாப் பொருளாக மாற்றி லாபத்தை அபகரிக்கும் தந்திரம் ஒருபுறம்.

புதிய இந்தத் தங்கப்புரட்சி மூலம் இன்று லாபம் என்று மகிழ்ச்சியுறும் அதே விவசாயிகள் நாளை நஷ்டமடைந்து நிலத்தைவிட்டு வெளியேறினால், கார்ப்பரேட்டுகளின் நில அபகரிப்புக்கு வழியும் பிறக்கும்.

மான்சென்டோவின் மஞ்சள் மக்காச்சோளத் தங்கப் புரட்சியால் அமெரிக்காவுக்குத் தங்கம் கிடைக்கும். இந்தியாவுக்கு என்ன கிடைக்கும்? தங்கம் கிடைக்காது. நிறைய பங்கம் கிடைக்கும்.

**வேளாண் பொருள்கள் இருப்பு வைக்க 33 கூட்டுறவு சங்கங்களில் தலா ரூ.8 லட்சத்தில் புதிய கிடங்கு: ஆட்சியர் தகவல்**

First Published : 20 Nov 2011 01:09:42 PM IST

தருமபுரி, நவ. 19: வேளாண் பொருள்களை இருப்பு வைக்க 33 கூட்டுறவு சங்கங்களில் தலா ரூ. 8 லட்சத்தில் புதிய கிடங்கு அமைக்க கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று ஆட்சியர் ஆர். லில்லி தெரிவித்தார்.

தருமபுரியில் 58-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவில், கூட்டுறவு கொடியை ஏற்றி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆட்சியர் ஆர். லில்லி பேசியது:

மகளிர் மேம்பாட்டுக்காகவே அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை மூலம் 2 சர்க்கரை ஆலைகள், மத்தியக் கூட்டுறவு வங்கியின் 20 கிளைகள், 131 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், 2 கூட்டுறவு விற்பனைச் சங்கம், 47 பணியாளர் சங்கம், பயிற்சி நிலையம், 358 பால்வள சங்கம், 30 ஆடு வளர்ப்போர் சங்கம், 6 நெசவாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 957 நியாய விலைக்கடைகளும் உள்ளன.

கடந்தாண்டு நஷ்டத்தில் இயங்கிவந்த 431 நியாயவிலைக் கடைகளுக்கு ரூ. 519 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறை மூலம் நடப்பாண்டு ரூ. 44 கோடிக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 13.14 கோடிக்கு ரசாயன உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 7 இடங்களில் வேளாண் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் 32 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம், பென்னாகரம் கூட்டுறவு விற்பனை சங்கம் ஆகியவற்றில் தலா ரூ. 8 லட்சத்தில் புதிய கிடங்கு கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றார்.

ரூ. 3 கோடி உதவி: விழாவில், 1,565 பயனாளிகளுக்கு

**தென்னைக்கு உரமிட உழவர் பயிற்சி நிலையம் அறிவுரை**

First Published : 21 Nov 2011 11:29:33 AM IST

தேனி, நவ. 20: தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பரவலாக பெய்த மழையை பயன்படுத்தி, தென்னைக்கு உரமிட்டு விவசாயிகள் பயனடைய வேண்டும் என்று தேனி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மைத் துணை இயக்குநர் வி.திலகர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியது: தென்னங்கன்றுகள் நடவு செய்த 6 மாதங்களுக்கு பின்பு, மரம் ஒன்றுக்கு 10 கிலோ மக்கிய தொழு உரம், 325 கிராம் யூரியா, தலா 500 கிராம் சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் ஆகியவற்றை ஆண்டுக்கு இரண்டு முறை இட வேண்டும். 2 ஆண்டு பருவம் உள்ள மரங்களுக்கு இதே உரங்களை இரண்டு மடங்கும், 3 ஆண்டு பருவமுள்ள மரங்களுக்கு 3 மடங்கும், 4 ஆண்டு பருவமுள்ள மரங்களுக்கு 4 மடங்கும் அதிகரித்து ஆண்டுக்கு இரண்டு முறை இட வேண்டும். 5 ஆண்டிற்கு மேல்பட்ட மரங்களுக்கு, மரம் ஒன்றுக்கு 50 கிலோ மக்கிய தொழு உரம், ஒரு கிலோ 300 கிராம் யூரியா, தலா 2 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை ஆண்டுக்கு இரண்டு முறை இட வேண்டும்.

நுண்ணூட்ட உரமாக மரம் ஒன்றுக்கு 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு, தலா ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றை ஆண்டுக்கு இரண்டு முறை இட வேண்டும். மரங்களுக்கு உரமிடும் போது, மரத்தைச் சுற்றி அரை வட்டம் அமைத்து அதில் செயற்கை உரங்களையும், மீதமுள்ள அரை வட்டப் பகுதியில் மக்கிய தொழு உரத்தையும் இட வேண்டும். உரமிட்ட பின்பு உரம் முழுவதும் நன்கு நனையும் வகையில் மரத்துக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

தென்னை மரங்களுக்கு சமச்சீர் உரமிடுவதால் மகசூல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது என்றார்.

உண்மையின் உரைகல்

**கொட்டி கிடக்குது "அக்ரி கிளினிக்' மானியம் : வாங்குவதற்கு தான் ஆட்கள் இல்லை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,00:38 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை : விவசாய கிளினிக் பயிற்சி துவங்குவதற்கு, அரசு நிறைய மானியம் வழங்கினால் கூட, அதை பயன்படுத்துவோர் மிகமிக குறைவாக உள்ளனர். மத்திய அரசின் நேரடி நிதியுதவியின் கீழ், விவசாய பட்டதாரிகளுக்கு 2 மாதகால சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. உணவு, உறைவிடம், பயிற்சி இலவசம். பயிற்சிக்கு பின், சுயமாக தொழில் துவங்கும் வகையில், வங்கி வழிகாட்டுதலும் வழங்கப்படுகிறது. ஆனால் பயிற்சி பெறுவோரில் மிகக்குறைந்தளவு தான் வங்கிக் கடன் பெற்றுள்ளனர். கடந்த 2002 ல் இத்திட்டம் துவங்கப்பட்டது. இதுவரை 2000 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். ஆயிரம் பேர் வரை, சிறுஅளவில் தொழில் செய்கின்றனர். 110 பேர் தான், வங்கிக் கடன் பெற்று ஓரளவு சிறப்பாக தொழில் செய்கின்றனர். தற்போது இந்த கடனுக்கும் மானியம் வழங்க படுகிறது. விவசாயக் கடனுக்கு கூட ரூ.ஒருலட்சம் வரை தான், சொத்துபிணையமின்றி வாங்கமுடியும். ஆனால் விவசாய பட்டதாரிகளுக்கு ரூ.5லட்சம் வரை கடன்பெற, சொத்துபிணையம் தேவையில்லை. அதிகபட்சமாக ரூ.20 லட்சம் வரை, கடன்பெறலாம். இதில் 36 சதவீதம் மானியம். பெண்கள், எஸ்.சி.,எஸ்.டி., பிரிவினருக்கு 44 சதவீதம் மானியம். ரூ.20 லட்சத்தை, இரண்டு தவணையாக கடன்வழங்கினாலும், முழு மானியம் உண்டு. தற்போது விவசாய டிப்ளமோ படித்தவர்களுக்கும், பிளஸ்1, பிளஸ்2ல் விவசாய பாடத்தை படித்தவர்களுக்கும் பயிற்சி, கடன்பெற ஏற்பாடு செய்யப்படுகிறது. பயிற்சி பெற விரும்புபவர்கள், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அக்ரி கிளினிக், அக்ரி பிசினஸ் பயிற்சி மையம், 39,பெசன்ட் ரோடு, சொக்கிகுளம், மதுரை - 625 020. போன்: 0452 - 253 8642.

**பால் உற்பத்தியை பெருக்க மாடுகளுக்கு சிகிச்சையில் மாற்றம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,00:39 IST

மதுரை : தமிழகத்தில் பால் உற்பத்தியை பெருக்க, மாடுகளுக்கான சிகிச்சை முறையில் மாற்றம் செய்ய உள்ளனர்.

தமிழகத்தின் பால் உற்பத்தியை 100 லட்சம் லிட்டராக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக,

வெண்மை புரட்சியை உருவாக்க, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மூலம் ரூ.8 கோடியே 33 லட்சத்து 90 ஆயிரம் ஒதுக்கப்
பட்டது. இதன் மூலம், "சிறப்பு கால்நடை மருத்துவ வசதி திட்டம்,' விரைவில் அமல்படுத்தப்படுகிறது. மாடுகளின் ஆரோக்கியம் இதற்கு முக்கியம். தற்போதுள்ள கால்நடை டாக்டர்களின் எண்ணிக்கை, மாடுகளின் அவசர சிகிச்சைக்கு ஏற்றதாக இல்லை. சிறப்பு கால்நடை மருத்துவ வசதி திட்டம் மூலம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உள்ள சிகிச்சைப் பிரிவை, அதிகரிக்க முடிவு செய்துள்ளனர். இதன் மூலம், மாடுகளுக்கு வாரம் ஒரு முறை அளித்து வந்த மருத்துவ சிகிச்சை, இனி இருமுறையாக அதிகரிக்கப்படும். இதற்காக ஓராண்டு ஒப்பந்தத்தில் கால்நடை டாக்டர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் 16 டாக்டர்களை நியமிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. சேவை செய்ய விருப்பமுள்ள 50 வயதுக்குட்பட்ட கால்நடை டாக்டர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. ஒப்பந்த அடிப்படையில், இவர்களுக்கு பணிவாய்ப்புகள் வழங்கப்படும். விருப்பமுள்ளவர்கள், "மேலாளர், மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், மதுரை,' என்ற முகவரியிலும், 0452 2529 561, 63 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**அரவணை பாயாசத்திற்கு தேனி வெல்ல மூடைகள்**

நவம்பர் 21,2011,10:22




பெரியகுளம் : சபரிமலை ஐயப்பன் கோயில் அரவணை பாயாசம் தயாரிப்பதற்கு, தேனி மாவட்டம் லட்சுமிபுரத்திலிருந்து தினமும் நூறுக்கும் அதிகமான வெல்லமூடைகள் அனுப்பப்படுகின்றன. பெரியகுளம் அருகே லட்சுமிபுரத்தில் 10க்கும் அதிகமான வெல்லம் ஏல மண்டிகள் உள்ளன. தென்மாவட்டங்களில் வெல்லம் விலையை நிர்ணயம் செய்வதில், லட்சுமிபுரம் வெல்லம் மார்க்கெட் முன்னிலையில் உள்ளது. இங்கிருந்து சபரிமலை ஐயப்பன் கோயில் பிரசாதமான அரவணை பாயாசம் தயாரிக்க, தினமும் 300 முதல் 500 வெல்லம் மூடைகள்

லாரியில் அனுப்பப்படுகின்றன.இவற்றை வெல்லம் ஏல மண்டியில் ஏலம் எடுக்கும் வியாபாரிகள் சபரிமலைக்கு அனுப்பி வைக்கின்றனர். கலர் வெல்லம் (42கிலோ எடை) ஒரு மூடை 1,600 ரூபாயாகவும், பச்சைவெட்டு 1,550 ரூபாயாகவும், செங்கால் 1,350 ரூபாயாகவும், கருப்பு 900 முதல் ஆயிரம் ரூபாயாகவும் விற்கப்படுகிறது. சீசனை முன்னிட்டு கடந்த பத்து நாட்களில் ஒரு மூடைக்கு 200 ரூபாய் விலை அதிகரித்துள்ளது.

**வேளாண் தொழில்நுட்பங்கள் வயல்களுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்: அமைச்சர்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,01:10 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் வேளாண் துறை சார்பில் தொழில்நுட்பட மேலாண் முகமை திட்ட இயக்குனர்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் விவாத கருத்தரங்கம் நடந்தது. வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் சந்தீப் சக்சேனா தலைமை வகித்தார். வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் பேசியதாவது: விவசாயத்தை சார்ந்த தொழில்கள், இயற்கை சூழ்நிலைகளை சார்ந்தே செயல்படுவதால் காலம் தவறிய பருவ நிலைகள் மற்றும் பல்வேறு காரணங்களால் விவசாயிகள் பெரும் அளவு பாதிப்புக்குள்ளாகின்றனர். இதன் காரணமாக விளை நிலங்கள் விலை நிலங்களாக மாறி வருகிறது. இந்த நிலை மாற தமிழக முதல்வர் ஜெயலலிதா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். கிராமப்புற மேம்பாட்டில் விவசாயம் மிக முக்கியமாக பங்கு வகிக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு மிகவும் அத்திவாசியமான பல்வேறு நலத்திட்டங்களை முதல்வர் செயல்படுத்தி வருகிறார். பெருகி வரும் ம க்கள் தொகையின் தேவைகளை சந்திக்கும் வகையில் உணவு உற்பத்தி அதிகரிக்க பல்வேறு விவசாய உத்திகள் உருவாக்கப்பட வேண்டும். வேளாண் தொழில்நுட்பங்கள் ஆராய்ச்சி கூடங்களிலிருந்து விவசாயிகளின் வயல்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழக முதல்வரின் ஆணைப்படி நடப்பாண்டு 115 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தியை எய்திட அனைத்து அலுவலர்களும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் பேசினார்.

வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வைத்திலிங்கம் பேசியதாவது: நகரமயமாக்கல், மக்கள் தொகை பெருக்கம் போன்ற காரணங்களால் உயர்ந்து வரும் உணவு தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. தற்போது கிராமங்களில் வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையை விவசாயத் தொழிலை

இயந்திரமயமாக்குவதுக்கு தேவையான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிதிநிலை அறிக்கையில் விவசாயத்துக்கென அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக முதல்வரின் ஆணைப்படி இரண்டாவது பசுமை புரட்சி ஏற்படுத்த வேளாண் துறை சார்ந்த அனைத்து அலுவலர்களும், விஞ்ஞானிகளும் செயல்பட வேண்டும். இவ்வாறு அமைச்சர் வைத்திலிங்கம் பேசினார்.

**விவசாய ஆராய்ச்சி பண்ணையில் நிதிநிறுவன பிரதிநிதிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,01:10 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரㄥங்கம் இயற்கை விவசாய பண்ணையில் "கிரியேட்' இயற்கை விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய செயல்பாடுகள் குறித்து நிதி நிறுவன பிரதிநிதிகள் நேரில் ஆய்வு செய்தனர். இயற்கை விவசாயத்தையும், பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் நமது நெல்லை காப்போம் பிரச்சாரத்தை தமிழகத்தில் செயல்படுத்துவது குறித்து "கிரியேட்' அமைப்பின் ஆவணங்களை ஆய்வு மேற்கொள்ள ஜெர்மனி நாட்டை சேர்ந்த பிரதிநிகள் வருகை தந்து, செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அவர்கள் பேசியதாவது: "நமது நெல்லை காப்போம்' பிரச்சாரம் தமிழகத்தில் மிக சிறப்பாக நடந்துள்ளது. விவசாயிகளிடம் பாரம்பரிய நெல் விதைகளை வழங்குவதில் முதன்மை நிறுவனமாக கிரியேட் விளங்குகிறது. இப்பணி மேலும் தொடரவும், விவசாயிகளுக்கு பணி சிறப்பாக செய்யவும் உதவிகள் செய்யப்படும். மேலும் கிரியேட் அமைப்பு நபார்டு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி போன்ற பொது நிறுவனங்களோடு இணைந்து பணி செய்வது பாராட்டுக்குரியது. இவ்வாறு அவர்கள் பேசினர்.ஆய்வின்போது கிரியேட் நிர்வாக அறங்காவலர் பொன்னம்பலம், "நமது நெல்லை காப்போம்' தேசிய ஒருங்கிணைப்பாளர் கேரளாவை சேர்ந்த உஷா, தனல் அமைப்பு ஸ்ரீதர், சகஜ சம்ருதா அமைப்பு கிருஷ்ணபிரசாத், கிரியேட் விதை வங்கி ஒருங்கிணைப்பாளர் செந்தில் உட்பட பலர் உடன் இருந்தனர்.

மயிலாடுதுறை எம்.பி., மணியன், கலெக்டர் பாஸ்கரன், எம்.எல். ஏ.,க்கள் ரெங்கசாமி, ரெத்தினசாமி, துரைகண்ணு, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அமுதா ரவிச்சந்திரன், நகராட்சி தலைவர் சாவித்திரி கோபால், நகரரரட்சித்துணைத்தலைவர் மணிகண்டன், வேளாண்மை துறை ஆணையர் மணிவாசன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் முருகேசபூபதி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் கலைச்செல்வன் ஆகியோர் பங்கேற்றனர்.

* மிக நெருக்கடியான சிறிய இடத்தில் கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கில் விவசாயிகளை தேட வேண்டியிருந்தது.

**சாகுபடி நிலங்களில் ஈரப்பதத்தை தடுக்க தடுப்பணையை உடைக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,01:16 IST

நங்கவள்ளி : சாகுபடி நிலங்களில் ஈரப்பதத்தை தடுக்க, தடுப்பணைகளை உடைத்து தண்ணீரை வெளியேற்றுவதால், நிலத்தடி நீர் மட்டம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்தில் நங்கவள்ளி ஒன்றியம் வனவாசி மலையில் உற்பத்தியாகும் தண்ணீர் சாணாவூர், சூரப்பள்ளி, கோட்டைமேடு, காட்டம்பட்டி வழியாக வேம்பனேயில் கலக்கிறது. நிலத்தடி நீரை சேமிப்பதற்காக, ஓடையின் குறுக்கே, 10க்கும் மேற்பட்ட இடங்களில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது.

சூரப்பள்ளி, கோட்டை, மேடு, காட்டம்பட்டி பகுதியில் ஓடையின் இருபுறமும் ஏராளமான விவசாய நிலங்கள் உள்ளது. தற்போது, விவசாயிகள் பருத்தி, சோளம், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். கடந்த மாதம் பெய்த வடகிழக்கு பருவமழையால், ஓடையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி தடுப்பணைகள் அனைத்தும் நிரம்பியது.
ஓடையின் இருபுறமும் நிலங்களில் சாகுபடி செய்த பருத்தி, கடலை போன்ற பயிர்களுக்கு நிலத்தில் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது. அதிக ஈரப்பதம் இருந்தால் மகசூல் பாதிக்கும். தற்போது ஓடை தடுப்பணையில் தண்ணீர் தேங்கி நிற்பதால், சாகுபடி நிலங்கள் சேறும் சகதியுமாக உள்ளது. அதனால், மகசூல் பாதிக்கும் என்பதால், கரையோர விவசாயிகள் தடுப்பணைகளை உடைத்து, ஓடையில் தேங்கும் நீரை வெளியேற்றுகின்றனர். தடுப்பணைகளில் தண்ணீர் தேங்காமல், கீழ்பகுதிக்கு செல்வதால், தடுப்பணை உடைக்கப்பட்ட பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், கோடைகாலத்தில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறையும் என்பதால், அருகில் உள்ள கிராமங்களை சேர்ந்த மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். எனவே, தடுப்பணைகள் உடைக்கப்படுவதை தடுக்க வேண்டும் என, கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஆனைமலையில் வேளாண் அமைச்சர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2011,23:10 IST

ஆனைமலை : ஆனைமலை பேரூராட்சி அலுவலகத்தை வேளாண்மைதுறை அமைச்சர் தாமோதரன் ஆய்வுசெய்தார். ஆனைமலை பேரூராட்சி அலுவலகம், பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை நேற்றுமுன்தினம் அமைச்சர் ஆய்வு செய்தார். வேளாண்மைதுறை அமைச்சர் தாமோதரன் கூறியதாவது: ஆனைமலையில் பாதாள சாக்கடை அமைக்கப்படும். நெல்கொள்முதல்மையம் திறக்கப்படும். விவசாயிகளுக்கு பயிர்பாதுகாப்பு திட்டம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். உரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். அமைச்சருடன் ஆனைமலை பேரூராட்சிதலைவர் சாந்தலிங்ககுமார், ஒடையகுளம் நகரசெயலாளர் கோபால்துரை, ஒடையகுளம் பேரூராட்சி துணைத்தலைவர் விமல் ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு குழு கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2011,23:14 IST

உடுமலை : உர விலை உயர்வு மற்றும் தட்டுப்பாட்டை கண்டித்து போராட்டத்தில் ஈடுபடுவது என விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உடுமலை நுகர்வோர் நலன், ஊழல் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு இயக்க அலுவலகத்தில் விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடந்தது.

விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க மாநில தலைவர் வேலாயுதசாமி தலைமை வகித்தார். இணை செயலாளர்கள் துரை மற்றும் நாராயணசாமி முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் மதுசூதனன், பாசன சபை நிர்வாகி பரமசிவம் பேசினார். கூட்டத்தில், கடந்த சில மாதங்களாக பயிர் சாகுபடிக்கு பயன்படுத்தும் உரங்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது.

பொட்டாஷ் மூட்டை விலை 243 ரூபாயிலிருந்து 565 ரூபாயாகவும், டி.ஏ.பி., 516 ரூபாயிலிருந்து 880 ரூபாயாகவும், பாக்டம்பாஸ் 489 ரூபாயிலிருந்து 700 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மத்திய, மாநில அரசுகள் உரங்களின் விலையேற்றத்தையும், தட்டுப்பாட்டையும் தவிர்க்க நடவடிக்கை இருக்காமல் இருப்பதை கண்டித்து போராட்டம் நடத்துவது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கள் இயக்க அமைப்பாளர் சுந்தரமூர்த்தி, விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**குலைநோயை கட்டுப்படுத்த வழி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2011,21:32 IST

ராஜபாளையம் : ""நெல் பயிரில் குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்த, தரமான விதைகளை தேர்வு செய்து, விதை நேர்த்தி செய்யவேண்டும்," என ,வேளாண்மை உதவி இயக்குனர் முத்துலட்சுமி கூறினார். அவர் கூறுகையில், ""இந்நோய் நெல்பயிரின் வளர்ச்சியை பாதிக்கும். இலை, கதிரின் கழுத்து, நெல்மணிகளில் தாக்குதல் இருக்கும்.

இதை தவிர்க்க, நோயற்ற தரமான விதைகளை தேர்வு செய்யவேண்டும். ஒரு கிலோ விதைக்கு 10கிராம் சூடோமோனாஸ், ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பென்டைசிம் கலந்து விதை தேர்த்தி செய்யவேண்டும். வயலில் நோய் தோன்றும் போது, டிரைசைக்ளோசோல் 400 கிராம் அல்லது கிட்டாசின் 250 கிராம் தெளிக்க வேண்டும். இதன் மூலம் குலைநோயை கட்டுப்படுத்தலாம்," என்றார்.

**தீவனப்பயிர் அபிவிருத்திக்கு மானியம் : விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2011,21:32 IST

விருதுநகர் : கால்நடைகளின் தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயிர் செய்ய, விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படவுள்ளது. கால்நடை பராமரிப்பு செலவினங்களை குறைக்க பசுந் தீவனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

அதிக மகசூல் தரக்கூடிய கம்பு, நேப்பியர் ஒட்டுப்புல், தானிய வகை தீவனப்பயிர்களான சோளம், மக்காச்சோளம், அதிக புரதச்சத்துள்ள வேலி மசால், முயல்மசால், தட்டைப்பயிறு போன்ற தீவன வகைகளை வழங்குவதின் மூலம் அடர் தீவனத்தின் தேவை குறைந்து, பால் உற்பத்தி செலவு குறைந்து, கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் அரசு மானியத்துடன் தீவன அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

அதிக மகசூல் தரக்கூடிய கம்பு, நேப்பியர் ஒட்டுப்புல் ரகம் கோ-3 , கோ-4 உடன் முயல்மசால், வேலிமசால் தீவனப்பயிர்கள் இறவையில் சாகுபடி செய்ய, 0.25 ஏக்கருக்கு ரூ.2590 மானியம்,

மானாவாரியில் 0.25 ஏக்கரில் தீவனச்சோளம், மக்காசோளம், உடன் தீவன தட்டைப்பயிறு சாகுபடி செய்ய ரூ.1,350 மானியம், தெளிப்பு நீர் பாசன கருவிகள் நிறுவுவதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 25 ஆயிரம் மானியம், மற்ற விவசாயிகளுக்கு 18,750 மானியம், கையால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில் 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

விருப்பமுள்ள விவசாயிகள், தங்கள் பகுதி கால்நடை உதவி டாக்டர், வேளாண் அலுவலரை அணுகி விண்ணப்பிக்கலாம், என, கலெக்டர் மு.பாலாஜி தெரிவித்துள்ளார்.